**கவனிக்க.-** *( i ) 2021.08.06 ஆந் திகதிய 2240ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III , பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.*

*( ii ) இவ் வர்த்தமானியின் பகுதி VI இல் 2021 ஆம் ஆண்டுக்கான பதுளை மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2241 - 2021 අගෝස්තු මස 13 වැනි සිකුරාදා - 2021.08.13

*2241 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) பெற்றோலிய வளங்கள் சட்டமூலம் 2021, யூலை மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) சமாதானம், கல்வி, வலுவளிப்பு மற்றும் அபிவிருத்திக்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, யூலை மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஓகத்து மாதம் 20ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1661- B 082257 - 405 (2021/08)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## சுற்றுலா நீதிவான் நீதிமன்றம் - ஏறாவூர்

பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஆற்று மணல் 260 கியூப் 2021.08.21ஆந் திகதி காலை 9.00 மணிக்கு கரடியனாறு பொலிஸ் நிலைய நியாயாதிக்க எல்லைக்குள் அமைந்திருக்கும் பாலமடு எனும் இடத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதிக்குள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏலவிற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

மேலதிக நீதிவான்,
சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்,
ஏறாவூர்.

2021.07.19.

**ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப் பொருட்களின் விபரம்**

| தொ. இல. | வழக்கிலக்கம் | சான்றுப் பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | AR/721/2020 | ஆற்றுமணல் | 260 கியூப் |

8- 82

---

# ஆய விற்பனையும் குத்தகையும்

## அம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் இருக்கும் கள்ளுத் தவறணை குத்தகை - 2022

அம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் இருக்கும் முதலாம் இலக்க கள்ளுத் தவறணையில் 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை சில்லறையாக கள்ளு விற்கும் உரிமை வழங்குவதற்கு நடைமுறையில் இருந்து வரும் விதிகளுக்கு அமையவும் 1982, ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகைக்கு அமையவும் கேள்விகள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திர வைப்புப் பணமாக 5,000 ரூபாவை எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டுடன் முறையாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தமது சொந்தப் பெயரில் இருக்க வேண்டும். முகவர்கள் அல்லது இலங்கைப் பிரசைகள் அல்லாதவர்களின் மூலமாகவோ அல்லது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள 1982 ஆம் ஆண்டின் கள்ளுத் தவறணை குத்தகை சட்டங்களுக்கு அமைய அருகதையற்றவர்களின் கேள்விப்பத்திரம் அனுமதிக்கப்பட மாட்டாது.

4. ஒருவர் ஒன்றிற்கு மேற்பட்ட கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க முடியாது என்பதோடு 5 பேருக்கு மேல் ஒன்றாகச் சேர்ந்து அத்தவறணைக்கான கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படலாகாது.

5. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் "அம்பாந்தோட்டையின் 1 ஆம் இலக்க கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரம் - 2022" என தபால் உறையின் மேல் மூலையில் எழுதப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் சேர்க்கப்பட்டோ அல்லது தபாலிலோ 2021.09.16 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன்பாக அம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் கோருபவர்கள் அவைகள் மூடப்படும் நேரத்தில் அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

6. தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர் யார் என்பதை அறிந்ததும் அவர் ஒப்பந்த விற்பனை விதிகள் அடங்கிய கேள்விப்பத்திரத்தில் கைச்சாத்திட்டு அம்பாந்தோட்டை பிரதேச செயலாளரினால் குறிக்கப்படும் பணத்தைப் பிணைப்பணமாக கட்ட வேண்டும்.

7. ஒரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ ஏற்கவோ அல்லது மறுக்கவோ அம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு உரிமை உண்டு.

8. இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதி 2021.09.16 என மாற்றப்பட்டால், மறுபடியும் கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதி 2021.10.27 எனக் கருதப்படல் வேண்டும்.

9. மேலதிக விபரங்களுக்கு அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் அவர்களிடம் விண்ணப்பித்து தெரிந்து கொள்ளலாம்.

கௌசல்யா கலப்பத்தி,
பிரதேச செயலாளர்,
அம்பாந்தோட்டை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அம்பாந்தோட்டை,
2021.07.15.

**அட்டவணை**

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணை - 2022

| கள்ளுத் தவறணை | பிரிவு | எல்லை | கேள்விப் பத்திரம் முடியும் திகதி | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை | 2019.09.16 | மு.ப. 10.00 | பி. ப. 2.00 |
| | | | மு. ப. 10.00 | பி.ப. 5.00 | பி.ப. 9.00 |

8- 50

---

**2022 ஆம் ஆண்டுக்காக கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை**

**திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவு**

2022ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் கள்ளுத்தவறணைகளில் பதப்படுத்தப்பட்ட கள்ளை சில்லறை விலைக்கு விற்பனை செய்யும் பூரண அதிகாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 1982 ஆம் ஆண்டு ஓகத்து

மாதம் 20ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள விற்பனை நிபந்தனைகளுக்கும் கீழ்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்ட வகையில் 2022.09.29ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கள்ளுத் தவறணை குத்தகையைப் பெற்றுக்கொள்ள முன்வருவோர் உரிய கேள்விப்பத்திரப் படிவமொன்றை முறையாக நிரப்பி கீழே காட்டப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைப் பட்டியலில் விதிக்கப்பட்டுள்ள விலைமனுப் பணத்தைக் கொடுப்பனவு செய்து பெற்றுக்கொள்ளப்படும் பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டொன்றையும், பிரகடனப்படுத்தப்பட்ட குத்தகை நிபந்தனைகளுக்கமைய பெறப்பட்ட சொத்துச் சான்றிதழொன்றையும் உள்ளடக்கியதாக இலச்சினை பொறிக்கப்பட்ட கடித உறையொன்றில் இட்டு அதன் இடப்புற மேல் மூலையில் தம்மால் விலைமனுச் செய்யப்படுகின்ற தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி ஒவ்வொரு தவறணைக்குமென இங்கே காட்டப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் பதிவுத்தபாலின் மூலம் அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலம் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்குக் கிடைக்கச்செய்ய முடியும்.

3. கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பவர் கேள்விப்பத்திரத்தை நிரப்புகையில் கேள்விப்பத்திரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு திருத்தத்தையும் தமது கையொப்பத்தின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதித் தினமான 2021.09.29 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பிரதேச செயலகத்திற்கு வருகை தரல் வேண்டும்.

5. எவ்வித தகவல்களையும் உள்ளடக்காத கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு உண்டு.

6. மேற்குறித்த தினத்தில் விற்பனை செய்ய முடியாமல் போகின்ற கள்ளுத் தவறணையின் மீள் விற்பனை 2021.11.08 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மேற்கொள்ளப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தலும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக அமைந்திருத்தல் வேண்டும்.

7. இச் சலுகையைக் கொள்வனவு செய்பவர் தொடர்பாக பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர், அவ்வாறு பிரகடனம் செய்யப்பட்ட தினத்தன்று அதாவது குத்தகை விற்பனைத் தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்னர் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற நிதியில் இரண்டு மாதங்களுக்கான குத்தகைப் பணத்தினைவிட அதிகமான ஒரு தொகையை பிணையாகச் செலுத்தி தவறணை தொடர்பான நிபந்தனைகளுக்குக் கைச்சாத்திடல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கின்றபோது அறிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களிருப்பின், அவற்றை திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

யூ. டபிள்யூ. ரீ. யூ. ராஜகருணா,
பிரதேச செயலாளர்,
திவுலப்பிட்டிய.

பிரதேச செயலகம்,
திவுலப்பிட்டிய,
2021, யூலை 26.

**அட்டவணை**

| இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 27 - தாகொன்ன | திவுலப்பிட்டிய | தாகொன்ன | முற்பகல் 11.00<br>பிற்பகல் 5.00 | பிற்பகல் 2.00<br>பிற்பகல் 8.00 | 4,000 | 2021.09.29<br>முற்பகல் 10.30 |

8-86

### *2022 ஆம் ஆண்டுக்கான குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணைகளுக்கான பங்குப் பிரிவுகள் விற்பனை*

*2022, சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2022, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலத்தினுள் கீழ்க்காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள, கள்ளுத் தவறணைகளில் முத்திரையிடப்பட்டு அடைக்கப்பட்டுள்ள கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான பூரண வரப்பிரசாத விலைக்கு கொள்வனவு செய்வதற்காக 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் மதுவரி ஆணையாளரினால் வெளியிடப்பட்ட கள்ளு விற்பனை செய்வதன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2021, புரட்டாதி மாதம் 03 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை குருநாகல் பிரதேச செயலாளரினால் கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*கள்ளு பங்குப் பிரிவு விலைகளைக் கொள்வனவு செய்வதற்காக முன்வருவோர் உரிய கேள்விகோரல் படிவங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புப் பணத்தை செலுத்தி எந்த பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் உள்ள காசாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும் மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் கள்ளு விற்பனை தொடர்பான சான்றிதழ்களினையும் கடித உறையினுள் இட்டு அதனை முத்திரையிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் தாம் கோரும் கள்ளுத் தவறணையின் இலக்கத்தினையும் பெயரினையும் தெளிவாக எழுதி அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் கடைசி நேரத்துக்கு முன் கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது இந்தப் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் கேள்வி கோரல் பெட்டியில் இடுவதன் மூலம் பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்ய முடியும். குறித்த கேள்விகோரல் படிவங்களை சகல பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.*

*விண்ணப்பிக்கும் நபர்களினால் கேள்விகோரல் பத்திரம் பூர்த்தி செய்யப்படும் போது, கேள்விப்பத்திரங்களில் செய்யப்படும் எல்லாத் திருத்தங்களும் விண்ணப்பிக்கும் நபர்களின் பூரண கையொப்பம் இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.*

*கேள்வி கோரல் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2021, புரட்டாதி மாதம் 03 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையிலாகும். விண்ணப்பிக்கும் எல்லா நபர்களும் இந்த தினத்தன்று, குறிப்பிட்ட நேரத்தில் இந்த பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கு வருகை தந்திருத்தல் வேண்டும்.*

*எவ்வித காரணமும் முன்னறிவித்தலும் செய்யாமல் கேள்விப்பத்திரங்கள் அனைத்தையுமோ அல்லது கேள்விப் பத்திரங்களில் ஏதாவது ஒன்றையோ நிராகரிக்கும் உரிமை குருநாகல் பிரதேச செயலாளருக்கு உண்டு.*

*தனியான வரப்பிரசாதத்தை விலைக்குப் பெற்றுக்கொண்ட நபர் என அறிவிக்கப்பட்ட பின் சிறந்த கேள்விதாரர் என தெரிவு செய்யப்பட்டதும் அவர் குறித்த திகதி பி. ப. 2.00 மணிக்கு குருநாகல் பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்படும் தொகையினை பாதுகாப்பு பிணை வைப்பாகச் செலுத்தி விற்பனை நிபந்தனைகளில் கையொப்பமிடல் வேண்டும்.*

*2021 ஆம் வருடத்திற்காக தற்போது கள்ளுத் தவறணைகள் உள்ள இடங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு சான்று வழங்கப்பட மாட்டாது. தற்போது கள்ளுத் தவறணைகள் நடாத்திச்செல்லப்படும் கட்டிடம் 2021 ஆம் வருடத்திற்காக கிடைக்காவிடின் அதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிலையத்தின் தகுதி பற்றி கேள்விப்பத்திரம் வழங்கப்பட்ட திகதி தொடக்கம் 30 தினங்களுக்குள் சிறந்த கேள்வியாளரினால் அதற்காக குருநாகல் பிரதேச செயலாளரிடம் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.*

*2021, புரட்டாதி மாதம் 03 ஆந் திகதி பங்குப் பிரிவுகளின் விரும்பத்தகுந்த கோரல்கள் இல்லாதிருப்பின் 2021.10.06ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விலை பங்குப் பிரிவுகள் குறித்த இடத்திலேயே நடாத்தப்படும். மேலதிக விபரங்கள் தேவைப் படின் குருநாகல் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*டீ.பி.சீ. உதயகுமார,*
*பிரதேச செயலாளர்,*
*குருநாகல்.*

*பிரதேச செயலாளர் அலுவலகம்,*
*குருநாகல்,*
*2021, யூலை 20.*

**அட்டவணை**

**குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகள் - 2022**

| இலக்கமும் பெயரும் | பற்று (பிரிவு) | தவறணை திறக்கப்பட வேண்டிய பிரதேசம் | கேள்விப்பத்திர வைப்புத் தொகை | கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியும் நேரமும் | தவறணை திறக்கப்பட வேண்டிய நேரம் | தவறணை மூடப்பட வேண்டிய நேரம் |
|---|---|---|---|---|---|---|
| இலக்கம் 02 குருநாகல் | வேஉடவில்லி ஹத்பத்துவ | நகரப் பிரிவு இல. 1, 9, 10, 11, 12 | 3,000 ரூபா | 2021.09.03 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | மு. ப. 11.00<br>பி. ப. 2.00 | பி. ப. 5.00<br>பி. ப. 9.00 |

8-147

---

**இரத்தினபுரி மாவட்டத்தில் கள்ளுத்தவறணை ஏல விற்பனை - 2022**

**பலாங்கொடை இல. 01 - கள்ளுத்தவறணை**

2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள கால எல்லைக்குள் இங்கு கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் சில்லறையாக கள்ளு விற்பதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இங்கு கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் :-

(i) 1982.08.20 ஆந் திகதியுடைய இலக்கம் 207 வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏல விற்பனை நிபந்தனைகளின் படிவம்.

(ii) மதுவரிச்சட்ட நிபந்தனையில் காணப்பட்டுள்ள எல்லா மதுபான உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

2. எல்லா விலை மனுக்களையும் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கியின் பிரதேச செயலகம் - பலாங்கொடை எனும் கணக்கில் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்று 1,500.00 ரூபாவினை செலுத்தி "பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணை" எனக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. இலங்கையின் எல்லாப் பிரதேச செயலகங்களிலும் அல்லது கொழும்பு மதுவரித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட படிவத்தில் விலைமனு உறையையொட்டி (சீல் வைத்து) இடப்பக்க மேல் மூலையில் "பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணைக்கான விலை மனு" என்று தெளிவாகக் குறிப்பிட்டு விலை மனுத் திகதி முடிவடைய முன்பு பலாங்கொடை பிரதேச செயலகத்தின் விலைமனுப் பெட்டியில் அல்லது "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், பலாங்கொடை" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

4. எல்லா விலை மனுதாரர்களும் தமது சொந்தப் பெயரிலேயே விலை மனுவை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. ஒருவர் ஒரு கள்ளுத்தவறணைக்கு மேல் விலை மனுக்கோர முடியாத அதே வேளை இருவர் சேர்ந்தும் கள்ளுத்தவறணைக்கு விலை மனுக்கோர முடியாது.

6. விலைமனுதாரரால் குறிப்பிடப்பட்ட விலை மனுவின் தொகை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட வேண்டும். விலைமனுதாரர் எல்லா விலை மனுக்களிலும் கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். எல்லா விலை மனுக்களிலும் சாட்சியாளர் இருவரால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். நிபந்தனைகளுக்குட்படாத விலை மனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. விலை மனுக்கோரலில் வெற்றிபெற்ற மனுதாரர் விலை மனுவை வாங்கியவராகக் கருதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட பின் பலாங்கொடை பிரதேச செயலகத்தின் நிபந்தனைகளில் கையொப்பமிட்டு பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் பணத்தினை செயலகத்தில் வைப்பிலிட்டு கள்ளுத் தவறணையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

8. 2021.09.24 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும். விலை மனு கோரப்பட்டு முடிவடைந்ததும் விலை மனுப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் எல்லா விலைமனுதாரர்களும் குறிப்பிட்ட நேரத்தில் பலாங்கொடை பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

9. 2021.09.24 ஆந் திகதியன்று குறிப்பிட்ட நேரத்தில் இந்த ஏல விற்பனை நடை பெறாவிட்டால்; அது, மீண்டும் 2021.10.27ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

10. எந்தவொரு விபரமும் காட்டாது விலைமனுவை சொந்த விருப்பின் பேரில் நிராகரிக்கும் உரிமை பலாங்கொடை பிரதேச செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

11. 2021 ஆம் ஆண்டிற்கான தவறணை நடாத்தும் இடத்தில் இடத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதனைக் கூறமுடியாது. திறமையான விண்ணப்பக்காரரால் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தின் கட்டிடமொன்றை தேடிக்கொள்ள வேண்டும். அந்த கட்டிடத்திற்காக மதுபான ஆணையாளர் அவர்களின் அனுமதியைப் பெற வேண்டும். கட்டிடத்தைப் பெற்றுக்கொடுக்க ஆணையாளர் உடன்பாடில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

12. மாதாந்தக் கட்டணம் செலுத்திய பின் செலுத்தியதற்கான முத்திரை இடப்பட்டால் மட்டும் அனுமதிப்பத்திரத்தை குறித்த மாதத்திற்கு அனுமதிக்கப்படுவதோடு இல்லையெனில் அனுமதிப் பத்திரம் நிராகரிக்கப்பட்டதாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்

13. மேலதிக விபரங்களை பலாங்கொடை பிரதேச செயலகத்தில் கேட்டறிந்து கொள்ளலாம்.

எச். எம். எச். பண்டார,
பிரதேச செயலாளர்,
பலாங்கொடை.

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2021,ஓகத்து 06.

**அட்டவணை**

| கள்ளுத்தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | அமைவிடம் | கள்ளுத்தவறணை திறக்கப்பட வேண்டிய நேரம் | விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் காலமும் |
|---|---|---|---|---|
| இல. 01 பலாங்கொடை | பலாங்கொடை நகர எல்லை | பலாங்கொடை நகர சபைக்குட்பட்ட பிரதேசம் | மு. ப. 10.00 மணி முதல்- பி. ப. 2.00 மணி வரை பின் பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 9.00 மணி வரை | 2021.09.24 மு. ப. 10.30 மணி வரை |

8- 332

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்:* ரி டெக்ஸ்டைல் ஹோல்டிங் (பீவீஉ) எல்டீடி
*கம்பனி இல.:* பீவீ 00241473
*கூட்டிணைப்புத் திகதி:* 2021.07.05
*பதிவு முகவரி :* இல.341/1, ஸ்ரீ பரக்கும் மாவத்தை, கஸ கஹாவத்த, கொட்டுகொட

விஹாங்க டயஸ்,
கம்பனிச் செயலாளர்.

8- 53

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்:* விவேகோன் ஃபெட்டிலைசர் (பிவீஉ) எல்டீடி
*பதிவிலக்கம்:* பீவீ 00237726
*கூட்டிணைப்புத் திகதி:* 2021.04.05
*பதிவு முகவரி :* 271/A, "தரங்கா", ஹோகந்தர வீதி, தலவத்துகொட

கம்பனிச் செயலாளர்.

8- 54

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்:* கார்ல்சூ டிவெலாப்பர்ஸ் லங்கா (பீவீஉ) எல்டீடி
*பதிவிலக்கம்:* பீவீ 00237277
*கூட்டிணைப்புத் திகதி:* 2021.03.27
*பதிவு அலுவலக முகவரி :* 195 M /2, கார்ல்சூ கோர்ட், பேஸ்லைன் ரோட், கொழும்பு 09

கம்பனிச் செயலாளர்.

8- 66

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்:* சஸ்டெய்னபள் இன்வெஸ்டர் ஃபெசிலிடேஷன் எண்ட் கன்சல்டன்சி சேர்விசஸ் லங்கா (பீவீஉ) எல்டீடி
*பதிவிலக்கம்:* பீவீ 00238555
*கூட்டிணைப்புத் திகதி:* 2021.04.24
*பதிவு முகவரி :* 195 M /2, "கார்ல்சூ கோர்ட் ", பேஸ்லைன் ரோட், கொழும்பு 09

கம்பனிச் செயலாளர்.

8- 67

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் முன்னாள் பெயர்:* டயமண்ட் மார்க்கெட்டிங் (பிரைவேட்) லிமிடெட்
*கம்பனியின் புதிய பெயர்:* டயமண்ட் ரெய்ன்வேர் (பிரைவேட்) லிமிடெட்
*பதிவிலக்கம்:* பிவி 17526
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:* இல. 400/1, கொழும்பு வீதி, பிலிமதலாவ

கம்பனிச் செயலாளர்.

8- 106

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்:* எம் என்ட் எம் பெகேஜிங் சொலூஷன்ஸ் ( பிறைவட்) லிமிட்டட்

*பதிவிலக்கம்:* பீவீ 00223965

*பதிவு முகவரி :* கொஸ்வத்த, தம்பர, மீவன பலன, ஹொரன

கம்பனிச் செயலாளர்.

*8- 121*

---

### பொது அறிவித்தல்

கம்பனியின் தன்மையை மாற்றுதல் பற்றிய அறிவித்தல்.-

*கம்பனியின் பெயர்:* லக்மீ எக்ஸ்போர்ட்ஸ் லங்கா கம்பனி லிமிட்டட்

*பதிவிலக்கம்:* பீவீ 85771 பீபி

*பதிவு செய்யப்பட்ட முகவரி :* கெகிராவ வீதி, தலாவ

*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.10.08*

கம்பனிச் செயலாளர்.

*8-136*

---

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) இன் பிரகாரம் பொது அறிவித்தல்

Melstacorp PLC கம்பனியானது, அதன் அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனமான இலங்கை ரூபா எண்பத்து ஒன்பது பில்லியன் நூறு மில்லியன் (ரூபா89,100,000,000) இலிருந்து இலங்கைரூபா எழுபது பில்லியன் (ரூபா 70,000,000,000) ஆகக் குறைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது. மேற்குறிப் பிடப்பட்டுள்ள உத்தேச அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனக் குறைப்பு தொடர்பாக கம்பனியின் பணிப்பாளர் குழுவானது , கம்பனியின் பங்காளர்களை கூட்டி ஆராய்ந்து முடிவெடுக்கத் தீர்மானித்துள்ளது.

சபையின் கட்டளைப் பிரகாரம்,

FJ & G DE SARAM.

*2021.07.27.*

*8-140*

### விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ருக்கஹவில, வல்பொல, இல. 77/ A/ 2 எனும் முகவரியில் வசிக்கும் கோனதூவகே திமுது தமயந்தி பெரேரா (தே.அ.அ.இல. 196265910139V) ஆகிய நான், வல்பொல இல. 77/ 350 எனும் முகவரியில் வசிக்கும் கோனதூ வகே பாலித பெரேரா ( தே.அ.அ.இல. 610354378V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு ஜீ. எஸ். ரணதுங்க என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1996.05.19 ஆந் திகதிய 8715 ஆம் இலக்க, பத்தரமுல்ல பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் தொகுதி 214 இருமடித்தாள் 137 நாள் குறிப்பேட்டு இலக்கம் 8039 இன் கீழ் 2000.10.02 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட அற்றோணித்தத்துவத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித்ததத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாகவும் மற்றும் அற்றோணித்தத்துவகாரரால் மேள்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

கோனதூவகே திமுது தமயந்தி பெரேரா.

*2021.07.17.*

*8-87*

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இம்புல்கொட, அமுனுகொட, இல. 76/ Q எனும் முகவரியில் வசிக்கும் ஹேரத் முதியன்சேலாகே நயனாங்கனீ ஆகிய நான், கடவத, ரன்முது பிளேஸ், இல. 172/ 20 எனும் முகவரியில் வசிக்கும் கதிமச்சாரிகே கெலும் குமார என்பவருக்கு கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எச். ஏ. அயேஷா குமாரி என்பவரால் 2020.05.26 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு 897 ஆம் இலக்கமுடைய பத்தரமுல்ல பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் தொகுதி 91 இருமடித்தாள் 66 நாள் குறிப்பேட்டு இலக்கம் 1599 இன் கீழ் 2020.07.09 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாகவும் மற்றும் அற்றோணித்தத்துவகாரரால் மேள்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

ஹேரத் முதியன்சேலாகே நயனாங்கனீ.

*2021.07.22.*

*8-88*

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெஹிவளை, களுபோவில, கிரீடா மாவத்தை, இல. 31 எனும் முகவரியில் வசிக்கும் அப்துல் ரசாக் மொஹமட் அஸ்கர் (தே.அ.அ.இல. 840610900V) ஆகிய நான், கொழும்பு-10, மாளிகாவத்தை தொடர்மாடி , இல. 3/4 எனும் முகவரியில் வசிக்கும் செல்வராஜா வசந்த ஜெக்சன் ( தே.அ.அ.இல. 920462995V) என்பவருக்கு வழங்கப்பட்ட 2018.10.01 ஆந் திகதி சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான ஆர். சோபினி சிவயோகம் அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 33 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவப் பத்திரம் வழியான பொறுப்புகளிலிருந்து நீங்குவதாகவும் குறித்த தத்துவப்பத்திரத்தை இன்றிலிருந்து இரத்துச் செய்வதாகவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

அப்துல் ரசாக் மொஹமட் அஸ்கர்.

2021, யூலை 26.

8-89

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெஹிவளை, கள்விகார வீதி, இல. 194/ 1 எனும் முகவரியில் வசிக்கும் முலாபர் மொஹமட் சஜித் அப்துல் ( P.P. இல.N 2621714) ஆகிய நான், கொழும்பு 15, மட்டக்குளி றொட்ரிகோ இடம், இல. 95/ 10, 1/1, எனும் முகவரியில் வசிக்கும் மார்க் ரெவோர் டீ ரோஸ் (தே.அ.அ. இல.980112217V) என்பவருக்கு வழங்கப்பட்ட 2018.10.01 ஆந் திகதி சட்டத்தரணியும் பிசித்த நொத்தாரசுமான ஆர். சோபினி சிவயோகம் அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 32 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவப் பத்திரம் வழியான பொறுப்புகளிலிருந்து நீங்குவதாகவும் குறித்த தத்துவப்பத்திரத்தை இன்றிலிருந்து இரத்துச் செய்வதாகவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

முலாபர் மொஹமட் சஜித் அப்துல்.

2021 , யூலை 26.

8-90

### விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

உணவட்டுன, மெட்டரம்ப, கெத்சிறி இல்லத்தில் வசித்த தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்தில் அபுதாபியில் வசிப்பவருமான ஹேவா விதான கட்டடிகே ரேணுகா தமயன்தி ( தே.அ.அ.இல. 638280892V) ஆகிய நான், 2014.12.05 ஆந் திகதியன்று அபுதாபியில் அமைந்திருக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தூதுவராலயத்தில் கொன்சியூலர் செயலாளர் என். பீ. பீ. விஜேசேகர என்பவரின் முன்னிலையில் கையொப்பமிட்டு அவரால் உறுதிப்படுத்தப்பட்ட விஷேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் உணவட்டுன, மெட்டரம்ப, கெத்சிறி இல்லத்தில் வசிக்கும் கராகொட ஆரச்சிகே ராஜிகா சந்தமாலி ( தே.அ.அ.இல. 886871864V) என்பவருக்கு அளிக்கப்பட்டிருந்த அற்றோணித் தத்துவ அதிகாரத்தை 2021. 07.21 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றது என்றும் அற்றோணி தத்துவதாரியான என் பெயரினால் செய்யப்படும் எந்தவொரு விடயத்திற்கும் நான் பொறுப்பில்லை என்றும் அனைவருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஹேவா விதான கட்டடிகே ரேணுகா
தமயன்தி .
ஐக்கிய அரபு இராச்சியம்.

8-174

## அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

### வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2022

### மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவு

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கீழ்க்காட்டப்படும் பிரதேசத்தில் தகுந்த இடங்களில் 2022, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2022, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை தனியுடைமை அடிப்படையில் கீழ்வரும் நிபந்தனைகளில் வெளிநாட்டு மதுபானங்களை (உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்கள் உட்பட) விற்பனை செய்யும் பொருட்டு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(i) 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபானத் தவறணைகளை குத்தகையில் விற்கும் நிபந்தனைகள்.

(ii) மதுபான வரி அனுமதிப்பத்திரம் தொடர்பாக தற்போதுள்ள பொது நிபந்தனைகள்.

2. கீழ்வரும் நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட மாதிரிப்படிவங்கள் மூலம் கேள்விப்பத்திரங்களை ரூபா 5,000 இற்கு வைப்பிலிடப்பட்டமைக்கு ஏதேனும் பிரதேச செயலகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடனும் மற்றும்

குறிப்பிட்ட பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பாக சான்றிதழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதேபோன்று அந்த சான்றிதழில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் சொத்தொன்று விற்கப்படாமலிருப்பின் அந்த ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் 05 வருடங்கள் வரை செல்லுபடியாகும். வாடகை காலம் முடிவடைவதற்கு முன்பு ஆவணச் சான்றிதழின் செல்லுபடிக் காலம் முடிந்திருப்பின் முழுமையான வாடகைக் காலத்தில் செல்லுபடியானதாக இருக்கக்கூடிய ஆவணங்கள் தொடர்பாக சான்றிதழ் ஒன்றை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் காலத்தில் பாதி நாள் வரையிலான மிகுதி காலத்திற்கு மேலதிக ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை செல்லுபடிக் காலம் முடிவடைவதற்கு முன்பு குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்கு முன்னராவது சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்து ;
(ஆ) கொழும்பு 02, ஸ்டேப்லற் வீதி, மதுவரி அலுவலகத்திலிருந்து ;
(இ) கொழும்பு மதுவரிச் சபை அலுவலகத்திலிருந்து.

3. உறையில் இட்டு முத்திரை பொறிக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விப் பத்திரமும் உள்ளடக்கப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடல் வேண்டும் :-

“ 2022 ஆம் ஆண்டுக்கான மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் 09 ஆம் இலக்கமுள்ள வெளிநாட்டு மதுபான தவறணைக்கான கேள்விப்பத்திரம் ”

2021.09.21ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்பு மொறட்டுவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திர உரிமையாளர்கள் கேள்விப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இறுதி நேரத்தில் மொறட்டுவை பிரதேச செயலகத்திற்கு வருதல் வேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் அச்சந்தர்ப்பத்திலேயே கொள்வனவு செய்தவராக அறிவிக்கப்படுவதுடன் குறிக்கப்பட்ட பணத்தை வைப்புச் செய்யப்பட்ட பிணைக் கட்டணமாக மொறட்டுவை பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளருக்கு அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதும் வாடகைக்கு விடுதலுக்கான நிபந்தனைகளில் கைச்சாத்திட அல்லது குறிப்பிட்ட பிணைப் பணத்தை எதிர்காலத்தில் வைப்பிலிடத் தவறுமிடத்து அவர் வைப்பிலிட்ட கேள்விப்பத்திர பிணைப் பணத்தை இழப்பதுடன் அவரை குற்றவாளியென மதுவரி அனுமதிப்பத்திரக்காரர்களின் பட்டியலில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் முழுமையான பிணைப்பணத்தை வைப்பிலிட்டு விற்பனை செய்யும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் உரிமையாளர்களின் கேள்விப்பத்திர பிணைப்பணம் மறுபடி செலுத்தப்படும்.

6. எக்காரணமும் அறிவிக்கப்படாமல் ஒன்றையோ அல்லது அனைத்து கேள்விப் பத்திரங்களை மறுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. இந்த வெளிநாட்டு மதுபான தவறணைகள் நிலையத்தை பிரிவு இலக்கம் 09 இல் நிறுவுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர் பிரிவினுள் தகுதியுள்ள கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அதன் பொருட்டு மதுவரி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். கட்டிடமொன்றைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பினை பிரதேச செயலாளர் கொண்டிருக்கவில்லை. அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகள் பட்டியல் கீழ்வருமாறு:-

| (அ) | (ஆ) | (இ) | (ஈ) | (உ) | (ஊ) | (எ) | (ஏ) |
|---|---|---|---|---|---|---|---|
| இலக்கம் | பிரிவு | மதுபான தவறணை உள்ளடக்கப்படும் பிரதேசம் | மதுபான தவறணை திறக்கப் படும் நேரம் | மதுபான விற்பனை நிலையம் மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திரத்தின் பொருட்டு வைப்பிலிடப் படும் தொகை ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதி நேரம் | விற்கப்படும் திகதி |
| 1 | மொறட்டுவை மாநகரசபை எல்லைக்குள் பிரிவு இல. 09 | மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தில் பிரிவு இல. 09 காலிப் பாதையின் மேற்குப் பிரதேசத்தில் அமைந் துள்ள மொறட்டுவெல்ல கிராமத்தில் மாத்திரம். | மு. ப.11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2021.09.21 |

8. மேலதிக விபரங்களை மொறட்டுவை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

9. **குறிப்பு**.- 2021.09.21ஆந் திகதிக்கு வாடகைக்குவிட இயலாத வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் 2021.10.28 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறுபடியும் குத்தகையில் விற்கப்படும்.

இஷன்கா டீ.கே. உடவத்த,
பிரதேச செயலாளர்,
மொறட்டுவை.

பிரதேச செயலகம்,
மொறட்டுவை,
2021, யூலை 27.

8- 108

---

## அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணைக் குத்தகை விற்பனை-2022

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதும் 1983 ஆம் ஆண்டிலும் அதற்குப் பிந்திய கால எல்லைக்குள் இங்கு காணப்படும் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளதும் வெளிநாட்டு மதுபான தவறணைகள் ( தானியங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தேசிய பான வகைகளும் அடங்கலாக) குத்தகைக்குக் கொடுத்தல், 2022 ஆம் காலப்பகுதிக்குள் நிபந்தனைகளுக்கமைய வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் ( தானியங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தேசிய பான வகைகளும் அடங்கலாக) தனி நபருக்கான சில்லறை விற்பனைக் குத்தகை கொடுப்பனவுக்கான உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16ஆந் திகதி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள நேரம் வரை அம்பகமுவ பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) அனைத்துக் கேள்விப்பத்திரங்களும் ஏதேனும் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையான விண்ணப்பப்படிவமாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நிரந்தர வைப்புப் பணமாக அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச் சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) பிராந்திய மேலதிக அரசாங்க அதிபரால்/ பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்வித் தாளில் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அசைவற்ற ஆதனங்களின் அத்தாட்சிப்பத்திரத்தை சமர்ப்பிக்கும் போது வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் நிபந்தனைகளுக்குட்டபட்டவாறாக கேள்விதாரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும் போது கேள்விதாரர் கீழ்க்காணும் முக்கியத்துவங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

i. கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித் தொகை எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

ii. பூரணப்படுத்தப்பட்டுள்ள கேள்விப்பத்திரமானது கையொப்பமிடும் சாட்சிகளது தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

iii. கேள்விப் பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விதாரரின் முழுமையான கையொப்பத்தையும், திகதியையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

iv. சிறப்புரிமை பெற்ற கேள்விதாரர்கள் தமது தேசிய அடையாள அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

நிபந்தனைகளுக்கு உட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச் சீட்டு, பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது மேல்மூலையில் தவறணைக்கான பெயரையும், இலக்கத்தையும் குறிப்பிட்டு அம்பகமுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் கேள்வி மனு செய்யப்பட வேண்டிய கால எல்லைக்குள் இடப்பட வேண்டும். தபாலில் கேள்விகளை சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவடைவதற்குள் பதிவு தபாலில் அம்பகமுவ பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நேரத்திற்கு கேள்விதாரர்கள் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ மறுக்கவோ பிரதேச செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர்கள் விற்பனைத் தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் அம்பகமுவ பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட மூன்று மாத விற்பனைக்குக் குறையாத பிணைப்பணம் அம்பகமுவ பிரதேச செயலகத்தில் செலுத்த வேண்டும். மேற்படி வைப்புப் பணம் "பிரதேச செயலாளர்" என்ற பெயரில் கினிகத்தேனை மக்கள் வங்கியில் நிரந்தர சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணமானது பணம், காசோலை அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்பட்ட பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்பட வேண்டும். தேவையான முத்திரைகள் செலுத்தி குத்தகைக்காரர்கள் நிபந்தனைகளினதும் ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

7.நியமிக்கும் தவணைக்கட்டணம் மாதாந்தக் காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

9 . மேற்படி திகதியில் குத்தகைத் தவறணைகள் கொடுக்கப்படாத பட்சத்தில் 2021.10.26 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீள் விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்குக் கொடுப்பது சம்பந்தமாக இறுதித் தீர்மானம் பிரதேச செயலாளருடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் அம்பகமுவ கோரளை பிரதேச செயலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

**அட்டவணை**

**வெளிநாட்டு மதுபான தவறணைகள்**

| இலக்கமும் தவறணையின் பெயரும் | தவறணை நிறுவப் பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் பெறப்படும் கால எல்லை | பிணைப்பணம் ரூ. ச. |
|---|---|---|---|
| 1. நோர்வூட் | நோர்வூட் நகர எல்லையில் 3 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2021.09.16 மு.ப.10.30 | 5,000.00 |
| 2. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 4 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2021.09.16 மு.ப.10.30 | 5,000.00 |
| 3. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 5 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2021.09.16 மு.ப.10.30 | 5,000.00 |

சிதாரா ருவினி கமகே,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை.

பிரதேச செயலகம்,
அம்பகமுவ கோரளை,
கினிகத்தேனை,
2021, யூலை 21.

8-177

## நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத் தவறணைகள் வெளிநாட்டு குடிவகை தவறணைகள் குத்தகை விற்பனை - 2022

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பின்னரான காலத்திலும் நடைமுறையில் உள்ளவாறான கள்ளு, வெளிநாட்டு குடிவகை தவறணைகள் உத்தரவுப் பத்திரம் சம்பந்தமாக கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய 2022 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்குக் கொடுத்தல். இக்காலப்பகுதியில் கள்ளு, வெளிநாட்டு மதுபான வகைத் தவறணைகள் ( தானிய வகைகளைக் கொண்டு இந்நாட்டில் தயாரிக்கப்படும் குடிவகை உட்பட) தனிநபருக்காக சில்லறை விற்பனை குத்தகைக்குக் கொடுப்பதற்கான உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2021.09.13 ஆந் திகதி அட்டவணையில் குறிப்பிட்ட நேரம் வரையும் கேள்விப்பத்திரம் நுவரெலியா பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2 . (அ) இத்தீவின் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரம் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.*

*(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச் சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.*

*(இ) பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்விக்காரரின் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கும்போது, கள்ளுத்தவறணைகளினதும், வெளிநாட்டுக்குடிவகை குத்தகைக்கான நிபந்தனைகளுக்குட்பட்டவாராக கேள்விப்பத்திரதாரர் இருத்தல் வேண்டும்.*

*(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும் போது கேள்விப்பத்திரதாரர் கீழ்க்காணும் முக்கியத்துவங்களைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.*

(i) *கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.*

(ii) *பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிடும் சாட்சிகளது ஆளடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.*

(iii) *கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள் , மாற்றங்கள் செய்யப்படின் கேள்விப்பத்திரதாரரின் முழுமையான கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.*

(iv) *ஒவ்வொரு கேள்விப்பத்திரதாரர்களும் தமது அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆள் அடையாள அட்டையின் பிரதியை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*மேற்படி நிபந்தனைகளுக்குட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.*

*3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டு , பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணைக்கான பெயரையும் தவறணைக்கான இலக்கத்தையும் குறிப்பிட்டு நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டிய கால எல்லைக்குள் போடப்படல் வேண்டும். தபாலில் கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவதற்குள் பதிவுத் தபால் மூலம் நுவரெலியா பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.*

*4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விப்பத்திரதாரர்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ எனக்கு அதிகாரம் உண்டு.*

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரதாரர் விற்பனைத் தினத்தன்று பி.ப.2.00 மணிக்கு முன் நுவரெலியா பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட தொகையை பிணைப் பணமாக நுவரெலியா பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும். மேற்படி வைப்புப் பணம் நுவரெலியா இலங்கை வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்புக் கணக்கில் எனது பெயரால் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப் பணம் காசாக அல்லது இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்படல் வேண்டும். உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு தேவையான முத்திரைகள் கேள்விப்பத்திரதாரரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. நியமிக்கும் தவணைப்பணக் கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே, கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கும் தகைமையுடையவராவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாகச் சமர்ப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

9. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2021.10.14 ஆந் திகதி மு.ப. 10.30 மணியளவில் மீள் விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது சம்பந்தமான முடிவான தீர்மானம் என்னுடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஏ.ஏ.விதுர சம்பத்,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2021, யூலை 29.

**அட்டவணை**

**வெளிநாட்டு மதுபானத் தவறணைகள்**

| தவறணையின் பெயர் | தவறணையை அமைக்க வேண்டிய இடம் | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நேரம் | கேள்வி வைப்புப் பணம் ரூபா.ச. |
|---|---|---|---|---|
| இல. 01 நுவரெலியா | மாநகர சபை நுவரெலியா, இல. 6 பிரிவிற்குள் | 2021.09.13 | மு. ப. 10.30 மணி | 5000. 00 |

8- 213

# ஏல விற்பனைகள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

பீ. எம். ஆர்.கே. ஹேரத்
கணக்கு இல.: 0109 5000 2757

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2021.02.25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2021.04.01 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2021.03.22ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக் குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான தொண்ணூற்று நான்கு இலட்சத்து முப்பத்தோராயிரத்து தொளாயிரத்தைம்பத்தொரு ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 94,31,951.79) 2021, பெப்புருவரி 02 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை (ரூ. 12,50,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து தசம் ஐந்து வீதம் (15.5%) மேலும் அறுபத்தைந்து இலட்சத்து தொண்ணூற்றுமூவாயிரம் ரூபா (ரூ. 65,93,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டுமுறி இலக்கங்கள் 7950, 1364, 4823 மற்றும் 1071 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக 2021.09.14 ஆந் திகதி மு.ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

